அளவில்லா அருளாளனின் அருள்நாமம் கொன்டு துவங்குகிறேன்

பிஸ்மில்லாஹ்

## மோகம் உண்னை தாழ்த்தும் தவ்பா உண்னை உயர்த்தும். தவ்பாவை மறந்துவிடாதே!

- அனைத்து உலகை உன் ஆற்றலாலே அடக்கியாளும் நாயனே!
- இழைத்த பாவங்கள் பொருத்துக்காக்க இறைஞ்சுகன்றோம் நாயனே!
- நிறைந்த குறையை நெஞ்சில் தேக்கி நிற்கின்றோமே நாயனே!
- கறைகள் படிந்த நிலையில் வந்து கலங்குகின்றோம் நாயனே!
- வான மீன்கள் வணங்கும் இந்த வண்ண நாலில் நாயனே!
- மார்க்கம் மரந்த பாவச்சுமையை ஏந்தி வந்தோம் நாயனே!
- தாழைப் போட்டு செல்வரெல்லாம் துங்குகின்றார் நாயனே!
- ஏழைக்காவல் உன் வாசம் தமக்கு ஏது கதவு நாயனே!
- துனையில்லாத அனாதையாகித் தேம்புகிறோம் நாயனே!
- இனையில்லாத உன் வாசம் வந்தோம் இரக்கம் காட்டு நாயனே!
- இழிவு செய்த எம் கரங்கள் தம்மை ஏந்துகின்றோம் நாயனே!
- அழிவுப் பாதையில் அருகில் உள்ளோம் அணைத்துக் காத்தருள் நாயனே!
- தூசீனாமலை உன்ஜோதி கண்டு தூளாய் போனது நாயனே!
- தூயஉனது நூரைக்காணும் தூய்மை தருவாய் நாயனே!
- நெறியின் வழியே எமது கால்கள் நடப்பதில்லை நாயனே!
- விழிகட்கோ உன் ஒளியைக் கானும் வலிமை இல்லை நாயனே!
- உன்னைப் பகைத்தவன் தன்னை மதித்து உன்னை மறந்தோம் நாயனே!
- கண்கள் இருந்தும் குருடாகிக் கருத்தும் சிதைந்தோம் நாயனே!
- வனத்தில் வாழும் விலங்கும் உன்னை வணங்கிப் போற்றும் நாயனே!
- மனிதராகப் பிறந்த நாங்கள் மறந்து போனோம் நாயனே!
- வஞ்சம் மோசம் பொயதள் தம்மை வளர்த்து வைத்தோம் நாயனே!
- கொஞ்சமேனும் கடமை நினைவு கொள்ளவழல்லை நாயனே!
- அண்டுவோர்க்கு வழங்கச் சொல்லி ஆணையிட்டாய் நாயனே!
- மண்டியிட்டு வேண்டுகின்றோம் மானம் காதடதருள் நாயனே!
- நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் இழைத்த பாவம் பொறுத்து அன்பைச் சொரிந்தாய் நாயனே!
- தீதைச் செய்து திருத்தி வந்தோம் தயவு காட்டு நாயனே!
- நபி நூஹு அலைஹிஸ்ஸலாம் கப்பலை ஒரு நாள் கரையில் சேர்த்தாய் நாயனே!
- பாவக்கடலில் மூழ்கும் எம்மைப் பாதுகாத்தருள் நாயனே!
- நெருப்பு நபி இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் தம்மை நெருங்கத் தடுத்தாய் நாயனே!
- நரக நெருப்பில் நாங்கள் வீழ நாடாதே நாயனே!
- பதுறுப் போரில் இறுதி நபியாம் நம் நாயகத்துக்கு வாகைத் தந்தாய் நாயனே!

- எதிர்க்கும் ஷைத்தான் மனிதப் போரில் எமக்குத் துனைநில் நாயனே!
- உண்மையாளர் அபூக்கர் ரழியல்லாஹு அன்ஹு தம் உண்மை வேண்டும் நாயனே!
- தம்மை நீதியில் உயர்ந்த உமர் ரழியல்லாஹு அன்ஹு தர்ம நெறியருள் நாயனே!
- சிறந்த அடக்கம் நிறைந்த உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு செய்கை வேண்டும் நாயனே!
- அறிவின் வாயல் வீரர் அலியின் ரழியல்லாஹு அன்ஹு ஆற்றல் வேண்டும் நாயனே!
- பென்கள் திலகம் பாத்திமாவின் ரழியல்லாஹு அன்ஹா பொறுமை வேண்டும் நாயனே!
- உண்மை தியாகி ஹஸன் ஹுஸைன் ரழியல்லாஹு அன்ஹுமா உள்ளம் வேண்டும் நாயனே!
- பிலால் ரழியல்லாஹு அன்ஹு பாங்கின் இனிமையாலே பள்ளி நிறைத்தாய் நாயனே! பாங்கைக் கேட்டு நாங்கள் உன்னை பணியச் செய்வாய் நாயனே!
- தெளிந்த ஞானி இமாம் கஸ்ஸாலி ரழியல்லாஹு அன்ஹு தெளிவு வேண்டும் நாயனே!
- தவத்தின் சிகரம் கௌதுல் அஃலம் ரழியல்லாஹு அன்ஹு தூய்மை வேண்டும் நாயனே!
- கண்னிய ஒலிமார் அன்பு வேண்டும் நாயனே!
- கண்ணில் பெருமானர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் காட்சி வேண்டும் நாயனே!
- நபிமார் ஒலிமார் அனைவர்க்காக நல்லருள் புரி நாயனே!
- எக்காலமும் எம் பெருமானர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அன்பிள் எனை நிளைக்க வைப்பாய் நாயனே!
- சுகம் வழங்கி இரண்டு லோகச் சுடரை ஏற்றிடு நாயனே!
- நாங்கள் செய்யும் செய்ய இறுக்கும் அத்துனை நல்ல காரயத்தையும் ஏற்றிடு நாயனே!
- நாங்கள் அனைவரும் ஹக்கிள் நிலைபெர அருள்புரி நாயனே!

எம் பெருமானார் ஷபீஉல் முத்னிபீன் ரஹ்மத்துன் லில் ஆலமீன். கண்மனி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை கௌதுல் அஃளம் ரழியல்லாஹு அன்ஹு அழைத்து இவ்வாரு பிரார்த்தனை வஸீலா தேடினார்கள். அறிவிப்பு: அப்துல் அஸீஸ் முஹத்திதுத் திஹ்லவி ரஹ்மதுல்லாஹி அலைஹி (புஸ்த்தானுல்-முஹத்திதீன்)

- அல்லாஹ் உடைய தோழரான அருமை ஹபீபுல்லா அவர்களே! எனது கையைப்பிடித்து காப்பாற்றி அருள்வீர்களாக எனது இயலாத்தன்மைக்குத் தங்களையன்றி கார்மானம் எனக்கு யாரும் இல்லையே! என்று கண்மனி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களிடம் இவ்வாறு வஸீலா தேடினார்கள்.

**உண்மையும் நன்மையும் உன்னிலும் என்னிலும் உண்டாகட்டும்**

**S.A.M.S.JAHAN MOWLANA HUSINI JALALI**

**Bathusha.com**

**Tsq.lk**